**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 168/2022** **நாள்.15.09.2025**

2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 நாள் வாதி தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைச்செல்வன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | மன்னன் | சாதி | |
| கிராமம் | கொடுக்கண்குப்பம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 45 |

**வா.சா.2**

**குறுக்கு விசாரணை**

வாதி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எதற்காக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நிலம் கிரையம் பேசி அக்ரிமென்ட் போட்டதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியும். வழக்குரை விபரங்களை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. பதிலுரை விபரங்கள் தெரியாது. 2 கிரைய ஒப்பந்தங்கள் போடப்பட்டன. கிரைய ஒப்பந்தம் போட்டதாக சொல்லும்போது அங்கு யார் யார் இருந்தது என்றால் வாதி, பிரதிவாதி, நான் மற்றும் ரூபலிங்கம் ஆகியோர் இருந்தோம். முதல் கிரைய ஒப்பந்தத்தில் 17 சென்ட் நிலத்திற்கு ரூ.25 ஆயிரம் கிரையத் தொகை நிர்ணயிக்கப்பட்டு ரூ.20 ஆயிரம் செலுத்தப்பட்டு ரூ.5 ஆயிரம் பாக்கி வைக்கப்பட்டது. 2 வது கிரைய ஒப்பந்தம் எவ்வளவு நாள் கழித்து போடப்பட்டது என்றால் 1 மாதம் கழித்து போடப்பட்டது. இரண்டாவது கிரைய ஒப்பந்தம் 1.50 ஏக்கர் நிலத்திற்கு போடப்பட்டது. நான் கொடுக்கண்குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமாக 70 சென்ட் நிலம் உள்ளது. அது என்னுடைய பூர்வீக சொத்து. எங்கள் ஊரில் நிலம் சென்ட் எவ்வளவு விலைக்கு விற்பனையாகிறது என்றால் ரோட்டின் ஓரம் உள்ள நிலம் பற்றி தெரியாது. என் நிலத்திற்கு பக்கத்தில் சென்ட் ரூ.7 ஆயிரத்திலிருந்து ரூ.9 ஆயிரம் வரை விற்பனையானது. கொடுக்கண்குப்பம் கிராமம் மலையனூரை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். அதனால் அங்கு நிலத்தின் மதிப்பு அதிகம் என்றால் தெரியாது. அங்கு 1 சென்ட் விலை ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.8 லட்சம் வரை விற்பனையாகிறது என்றாலும் நான் அதை மறைத்து தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கையெழுத்து செய்ததாக சொல்லும் ஒப்பந்தத்தை நான் சரியாக படித்து பார்க்கவில்லை என்றால் படித்து காண்பித்தார்கள். கிரைய ஒப்பந்தத்தின் சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் படித்து காண்பித்தார்கள். வாதி ஊரில் வட்டிக்கு பணம் கொடுப்பவர் என்றால் அப்படி தெரியவில்லை. வாதி ரூ.20 ஆயிரத்திற்கு மேல் பணம்

கொடுக்கும் போது ஆவணத்தில் கையெழுத்து வாங்கி கொண்டு கொடுப்பது வழக்கம் என்றால் அவ்வாறு எனக்கு தெரியவில்லை. பிரதிவாதி வாதியிடம் வட்டிக்கு பணம் வாங்கிக்கொண்டு அடமானமாகத்தான் வழக்கு சொத்தை காண்பித்தார் என்றாலும் கிரைய ஒப்பந்தம் போடவில்லை என்றாலும் சரியல்ல. அடமான பத்திரத்திற்கு பதிலாக வாதி கிரைய ஒப்பந்தம் எழுதி பிரதிவாதியிடம் கையெழுத்து பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. சிறிய தொகையை கொடுத்துவிட்டு பிரதிவாதியின் நிலத்தை அபகரிக்க வேண்டி நானும் வாதியும் கூட்டு சேர்ந்து தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வாறு ஊரில் பல சம்பவங்கள் நடந்து அதற்கு நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக அடமானம் போடுவதற்கு பதிலாக கிரைய ஒப்பந்தம் எழுதியதாக என் மீதும் வேடி என்பவர் மீதும் தசரதன் என்பவர் போலிசில் புகார் கொடுத்துள்ளார் என்றால் பேசிய பணம் செலுத்தி கிரைய செய்யாததால் போலிசில் புகார் கொடுத்து பின் பேசி சமாதானம் ஆனார்கள். நானும் ரூபலிங்கமும் கூட்டாக சேர்ந்து இவ்வாறு செயல்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. அடமான கடனை பிரதிவாதி பைசல் செய்துவிட்ட பின்னும் பத்திரத்தை திருப்பி தராமல் வாதி தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.